**வரையறுத்த கொழும்பு கொமேர்சல் பசளை கம்பனி -2023/2024**

-----------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

வரையறுத்த கொழும்பு கொமேர்சல் பசளை கம்பனியின் ("கம்பனி") 2024 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமான கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்கான தவல்களும் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2024 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கம்பனியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது கம்பனியின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கம்பனியின் கட்டுப்பாட்டு கம்பனியினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 02 இன் 28 ஆம் பிரிவிற்கு முரணாக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 1,409,592,766 தொகையான பசளை இருப்பினை கணிப்பீடு செய்யும் போது நிகர தேறக்கூடிய பெறுமதி சம்பந்தமாக பொருட்படுத்தாது கிரயத்தில் மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கம்பனியிடம் 2024/03/31 ஆந் திகதி பௌதீககணிப்பீட்டின் போது காலாவதியான பசளை இருப்பு காணப்பட்டது என்பது அடையாளங்காணப்பட்டிருக்காததுடன் மெதுவாக அசையும் இருப்புக்களின் நிகழ்கால சந்தைப் பெறுமதியானது இருப்பின் கிரயப் பெறுமதியினை விட அதிக பெறுமதியினைக் காட்டியிருந்தது. அதற்கிணங்க எங்கள் கம்பனி இறுதி இருப்பு கணிப்பீட்டினை சரியாக மேற்கொண்டுள்ளது எனக் குறிப்பிட விரும்புகிறேன். | இருப்பின் கிரயம் நிகர தேறக்கூடிய பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதிக்கு மீள்கணிப்புச் செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | கமநல சேவை நிலையங்கள், ஏனைய நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்டவர்களின் மூலம் கடன்பட்டோர் மீதியை தீர்த்துவைப்பதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட பணத்தை தனியாக ஒதுக்கி உரிய கணக்குகளில் செம்மையாக்கி தனித்தனி மீதிகளை | இது தொடர்பாக நாங்கள் தீவிர கவனம் செலுத்தி உரிய சரிசெய்தல்களினை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என தெரிவிக்க விரும்புகிறேன். | கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வினை மேற்கொண்டு ஐயக் கடனுக்கான ஒதுக்கீட்டினை அடையாளங்காணுதல் வேண்டும். |

அடையாளங்காண்பதற்கும் காலப்பகுப்பாய்வினை பூரணப்படுத்துவதற்கும் முடியாததனால் இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 36 இன் 96 ஆம் பந்திக்கு இணங்க ஐயக் கடனுக்காக ஒதுக்கீடு செய்வதற்கு முடியாதிருந்தது. 2018 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ஐயக் கடனுக்கான ஒதுக்கீடாகிய ரூபா 37,384,363 பெறுமதியே இந்த ஆண்டின் போதும் கடன்பட்டோருக்கான ஐயக்கடனாக கடன்பட்டோர் மீதியிலிருந்து கழித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் அதன் சரியான தன்மையை கணக்காய்வின் போது உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2024 மார்ச் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 11,165,141,941 தொகையான ஏனைய பெறவேண்டிய மீதியினுள் 01 ஆண்டிற்கு மேல் நீண்டகாலமாக தீர்த்துவைக்கப்படாத ரூபா 199,373,874 மீதி உள்ளதுடன் இந்த தீர்த்துவைக்கப்படாத நீண்ட கால பெறவேண்டிய மீதிக்காக எந்த ஒதுக்கீடும் செய்யப்பட்டிருக்கவில்லை. | இப்பிரச்சினை தொடர்பாக நாங்கள் கவனம் செலுத்தி எதிர்காலத்தில் ஆராய்ந்து பார்த்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வினை மேற்கொண்டு ஐயக்கடனுக்கான ஒதுக்கீட்டினை அடையாளங்காணுதல் வேண்டும். |
| (ஆ) | ரூபா 149,581,640 தொகையான பெறவேண்டிய வட்டி வருமானம் காசு பாய்ச்சல்கூற்றில் முதலீட்டுச் செயற்பாடுகளில் உள்ளடக்கப்பபட்டதன் காரணமாக அத்தொகையால் முதலீட்டு செயற்பாடுகள் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | இக்கணக்கீட்டுத் தவறினை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்க விரும்புகிறேன். | காசு உட்பாய்ச்சலினையும் காசு வெளிப்பாய்ச்சலினையும் முறைப்படியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (இ) | 2024 மார்ச் 31 ஆந் திகதி வரை கம்பனியின் வங்கி கணக்கிற்கு நேரடியாக கிடைத்த மொத்தமாக ரூபா 5,138,726 தொகையான பெறுவனவுகளை சரியாக அடையாளங்கண்டு கணக்குகளில் செம்மையாக்கப்படாது வைப்பின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நேரடி வைப்புக்களை அடையாளங்காண்பதற்காக உரிய வங்கியுடன் தொடர்புகொண்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இவ்வாறான சிக்கல் எதிர்காலத்தில் ஏற்படாமல் இருப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்க விரும்புகிறேன். | நேரடி வைப்பு பெறுவனவுகளை அடையாளங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | வரையறுத்த இலங்கை பசளை கம்பனிக்கு 2024 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 6,360,182 தொகை அட்டுறு செலவாக அடையாளங்காணப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக பரீட்சித்து சரிசெய்தல்கள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்க விரும்புகிறேன். | அட்டுறு செலவுகளை சரியாக அடையாளங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டிற்காக கணக்கீடு செய்துள்ள நிலையான வைப்பு வட்டி வருமானத்தினுள் முன்னைய ஆண்டு தொடர்பான ரூபா 29,586,074 வட்டி வருமானமும் உள்ளடக்கப்பட்டிருந்தது. | கணக்குகளைத் தயாரிக்கும் போது இடம்பெற்ற இச்சிக்கலினை சரிசெய்வதற்கு நடடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்க விரும்புகிறேன். | ஆண்டிற்குரிய வருமானத்தை அடையாளங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஊ) | ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் உதவியின் கீழ் இறக்குமதி செய்து பகிர்ந்தளிக்கப்பட்ட MOP பசளைகளில் கமநல சேவை நிலையங்களின் களஞ்சியத்தில் மிகுதியாகக் காணப்பட்ட பசளைகளுக்காக பொதுத் திறைசேரிக்குச் செலுத்த வேண்டிய ரூபா 166,760,000 பணம் நிதிக்கூற்றுக்களில் செலுத்த வேண்டிய பெறுமதியாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கமநல சேவை நிலையங்களின் மிகுதி இருப்புக்களுக்குரிய பணம் உரிய கமநல சேவை நிலையங்களின் மூலம் செலுத்த வேண்டியதாகும். எனவே அந்த இருப்புக்கள் எங்கள் கம்பனியின் பொறுப்பில் இல்லை. | அட்டுறு செலவுகளை சரியாக அடையாளங்கண்டு கணக்கீடு செய்வதற்கும் திறைசேரிக்கு மேற்கொள்ளப்பட வேண்டிய பணம் அனுப்புதல்களை உரிய முறைப்படி தீர்த்துவைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | கம்பனியால் நெனோ நைட்ரஜன் வங்குனர்களுக்கு மிகையாககச் செலுத்திய ரூபா 49,846,406 பணம் பெறவேண்டிய பணமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிய பணத்தை அறவீடு செய்வதற்குத் தேவையான சட்ட நடவடிக்கைகள் தற்பொழுது எடுக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான நடவடிக்கைகள் சட்டமா அதிபர் திணைக்களத்தின் மூலம் தற்பொழுது இடம்பெற்று வருகின்றது. அவ்வாறே இப்பணம் கம்பனியின் நிதியின் மூலம் செலுத்தப்பட்ட பணம் அல்லாததுடன் நேரடி யாக பொதுத்திறைசேரியின் மூலம் செலுத்தப்பட்ட பணமாகும். எனவே இப்பணம் எங்கள் கம்பனிக்கு கிடைக்க வேண்டிய ஒரு பணம் அல்ல. இநத நடவடிக்கையின் போது எங்கள் கம்பனி ஒரு இடைநடுவராகவே மாத்திரம் செயற்பட்டுள்ளது. | பெற வேண்டிய பணம் நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட வேண்டியதுடன் வழங்குனருக்கு மிகையாகச் செலுத்தியுள்ள பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | 2024 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ள ரூபா 19,721,956 கிரயமான பொதிசெய்யும் பொருள் இருப்பு பௌதீகரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்காததனால் அதன் சரியான தன்மை சம்பந்தமாக கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்படவில்லை. | இணங்கி கொள்ளவில்லை. பொதி செய்யும் பொருட்களுக்காவும் வருடாந்த இருப்பு மெய்மையாய்வு மேற்கொள்ளப்படுவதுடன் அதன் அறிக்கையானது இருப்பு மெய்மையாய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டள்ளது. | பௌதீக இருப்பு மெய்மையாய்வினை மேற்கொண்டு பெறுமதி செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | 2014 ஆம் ஆண்டில் பிராந்திய களஞ்சியத்தில் இடம்பெற்ற ரூபா 3,360,430 தொகையான இருப்பு பற்றாக்குறைக்காக களஞ்சிய பொறுப்பாளரிடமிருந்து அறவிட வேண்டிய பெறுமதியை அறவீடு செய்வதற்காக தற்பொழுது ஒரு வழக்கு இடம்பெற்று வந்திருந்தும் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்காததுடன் அப்பெறுமதியானது இருப்பு நட்டமாக கணக்கீடு செய்யப்படாது நானாவித கடன்பட்டோர் மீதிக்குள் உள்ளக்கப்பட்டிருந்தது. | 2012 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது இந்த இருப்பு பற்றாக்குறை செம்மையாக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக கம்பனிக்கு களஞ்சிய பொறுப்பாளரினால் செலுத்த வேண்டிய பணம் இவ்வாறு காட்டப்பட்டுள்ளது. அப்பணத்தை அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இருப்பு பற்றாக்குறையினை கடன்பட்டோர் மீதியிலிருந்து அகற்றி பொருத்தமாக வகைப்படுத்தி சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ஒ) | கணக்கு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற ரூபா 1,085,300 கிரயமான சேர்வரி மற்றும் தொடர்பாடல் வலையமைப்பு (Server & Network) மூலதனமாக்கப்படாது பூர்த்திசெய்யப்படாத வேலை மூலதனத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இப்பிரச்சினைகளையும் தற்பொழுது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வருடாந்த பெறுமானத் தேய்வினை சரியாக அடையாளங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை

| | விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | துணை அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி | வித்தியாசம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | வெளியீட்டின் மீதான பெறுமதி சேர் வரி (Output VAT) | 25,070,186 | 25,693,035 | 622,850 | வெளியீட்டின் மீதான பெறுமதி சேர் வரி பேரேட்டு கணக்கிற்கும் வரி அறிக்கைக்குமிடையேயான வித்தியாசத்திற்றான காரணம் ஆனது வரி அறிக்கையினை சமர்ப்பித்ததன் பின்னர் இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது செய்யப்பட்ட சரி செய்தல் ஆனதுடன் அந்த ரூபா 622,850 வித்தியாசத்தை அடுத்துவரும் காலாண்டிற்கான வரி அறிக்கையினூடாக சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியான பெறுமதி சேர்வரிப் (VAT) பெறுமதியை அடையாளங்கண்டு கணக்ககளில் காட்டுதல் வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (ஆ) | உள்ளீட்டின் மீதான பெறுமதி சேர் வரி (Input VAT) | 52,131,731 | 35,270,829 | 16,860,903 | உள்ளீட்டின் மீதான பெறுமதி சேர் வரிப் பெறுமதியில் வித்தியாசமான ரூபா 16,860,903 இற்கான காரணமாவது இலங்கை சுங்கத்திற்குச் செலுத்தப்பட்ட அந்த அளவு வரிப் பணத்திற்கான வரி இன்வொயிஸ் எங்கள் நிறுவத்தினால் எழுத்துமூலம் வேண்டப்பட்டிருந்தும் வரி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட திகதி வரை எங்கள் கம்பனிக்கு கிடைத்திருக்காமையாகும் . அதனால் வரி இன்வொயிஸ் இல்லாத கொடுப்பனவுகளை VAT பட்டோலைகளுக்கு உள்ளடக்க முடியாததனால் இலங்கை சுங்கத்திற்குச் செலுத்தப்பட்ட VAT பணம் முதலாவது காலாண்டிற்கான VAT வரி அறிக்கையில் உள்ளடக்கப்படவில்லை. இலங்கை சுங்கத்தினால் அதற்காக உறுதிப்படுத்தல் செய்ததன் பின்னர் அந்த வரிப் பெறுமதியை VAT அறிக்கையில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். முன்கொண்டு வரப்படுகின்ற உள்ளீட்டின் மீதான VAT வரி மீதியான ரூபா 9,577,794 தொகையினை ஒரு நடைமுறைச் சொத்தாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | -மேற்படி- |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (இ) | முன்கொண்டு சென்ற உள்ளீட்டின் மீதான பெறுமதி சேர் வரி (Input VAT) | - | 9,577,794 | 9,577,794 | -மேற்படி | -மேற்படி- |
| (ஈ) | ஆரம்ப இருப்பு மீதியினை கணனிமயப்படுத்திய கணக்கீட்டு முறைமையின் மூலம் (ERP) தயாரிக்கப்பட்ட இருப்பு அறிக்கையும் பௌதீகரீதியான இருப்பு மெய்மையாய்வு செய்தல் அறிக்கையும் | 30,472,835 | 689,930,496 | 659,457,661 | இத்தவறினை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கணனிமயப்படுத்திய இருப்பு அறிக்கையினையும் பௌதீக ரீதியான இருப்பு மெய்மையாய்வு அறிக்கையினையும் ஒப்பீடு செய்து வித்தியாசத்தினை சரிசெய்தல் வேண்டும். |
| (உ) | இறுதியான இறுப்பு மீதியினை கணனிமயப்படுத்திய கணக்கீட்டு முறைமையின் (ERP) மூலம் தயாரித்த இருப்பு அறிக்கையும் பௌதீக ரீதியாக இருப்பினை மெய்மையாய்வு செய்தல் அறிக்கையும் | 1,409,592,766 | 932,604,867 | 476,987,899 | இத்தவறினை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கணனிமயப்படுத்திய இருப்பு அறிக்கையினையும் பௌதீக ரீதியான இருப்பு மெய்மையாய்வு அறிக்கையினையும் ஒப்பீடு செய்து வித்தியாசத்தினை சரிசெய்தல் வேண்டும். |
| (ஊ) | கடன்பட்டோர் மீதி மற்றும் கடன்பட்டோர் மீதிகளின் பட்டோலை | 280,994,295 | 3,867,946,767 | 3,586,952,472 | இச்சிக்கலினை சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என தெரிவிக்க விரும்புகின்றேன். | சரியாக பெறுமதியை கணக்குகளில் காட்டுதல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| | விடயம் | தொகை<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | திறைசேரியிட மிருந்து கிடைக்க வேண்டிய வட்டி | 185,830,554 | கடன் மீதிகள் தொடர்பான உறுதிப்படுத்தல் கடிதம் | இது சம்பந்தமாக துரித கவனம் செலுத்தி திறைசேரியுடன் கலந்தாலோசித்து துரிதமாக தீர்வினைப் பெற்றுக்கொள்ளவதற்கு எதிர்பார்கின்றேன். | கிடைக்க வேண்டிய மீதிகளை அடையாளங்கண்டு கணக்கீடு செய்தல் மற்றும் அது சம்பந்தமன தகவல்களை கணக்காவிற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ஆ) | கடன்பட்டோர் மீதி | 280,994,295 | மீதிகளின் உறுதிப்படுத்துல் கடிதம் | இப்பிரச்சினையை சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது எனத் தெரிவிக்கிறேன். | தேவையான சான்றுகளை கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |
| (இ) | குறுங்காலக் கடன் | 32,488,030 | கடன் மீதிகள் சம்பந்தமாக வங்கியின் உறுதிப்படுத்துதல் கடிதம் | எதிர்காலத்தில் இவ்வாறான பிரச்சினை ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கிறேன். | தேவையான சான்றுகளை கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ஈ) | பாவனையாளர் வைப்புகடகளும் மிகைபட பெறுவனவுகளும் | 27,277,854 | பணப் பெறுவனவு பத்திரம் | -மேற்படி- | -மேற்படி- |
| (உ) | அறவிடக்கூடிய இழப்பீட்டுப் பணம் | 2,273,324 | இழப்பீட்டு உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணம் | -மேற்படி- | -மேற்படி- |
| (ஊ) | பெறவேண்டிய நிறுத்திவைத்தல் பணம் | 8,446,844 | நிறுத்திவைத்தல் வரியினை மிகையாக அறவீடு செய்தலினை உறுதிப்படுத்தும் ஆவணம் | எதிர்காலத்தில் இவ்வாறான சிக்கல் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கிறேன். | தேவையான சான்றுகளை கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |

### 1.5.5 கிடைக்க வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 1994 ஆம் ஆண்டிலிருந்து 1997 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போ்து கடன் அடிப்படையில் 15 பல்வேறு தனியார் கம்பனிகளுக்கு பசளை வழங்கியமைக்காக கம்பனியால் அறவிட வேண்டிய ரூபா 22,053,338 தொகையினை அறவீடு செய்ய முடியாதிருந்ததுடன் அப்பெறுமதி தொடர்பாக ஐயக்கடனுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இம்மீதியானது கம்பனியை தனியார் மயப்படுத்துவதற்கு முன்னர் அதாவது 1994 ஆம் ஆண்டிற்கு முன்பிலிருந்து காணப்பட்டு வரும் கடன்பட்டோர் மீதியானதுடன் அது தொடர்பான ஆவணங்கள் எதுவும் தற்பொழுது கம்பனியிடம் இல்லை என்பதனால் இம்மீதிகளை அறவிடமுடியாக் கடனாக பதிவழிப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என தெரிவிக்க விரும்புகிறேன். | நிலுவைக்கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| 2022 திசெம்பர் 21 ஆந் திகதிய PED08/2022 ஆம் இலக்க அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை | அரசாங்க கம்பனிகளின் ஊழியிர்களால் சேமிக்கப்பட்ட விடுமுறைகளுக்கான படிகளைச் செலுத்தும் போது கொடுப்பனவுகளுக்காக கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகின்ற ஆண்டிற்கு முன்னைய ஆண்டு தொடர்பாக திறைசேரிக்கு செலுத்த வேண்டிய பங்கிலாபம் / வருமானவரி செலுத்தியிருக்க வேண்டிய போதிலும் கம்பனியால் 2022/2023 நிதி ஆண்டிற்கான பங்கிலாபத்தை திறைசேரிக்குச் செலுத்தாது மீளாய்வாண்டில் கம்பனியின் சாதாரண ஊழியர்களால் சேமிக்கப்பட்ட குறுகிய விடுமுறை மற்றும் மருத்துவ விடுமுறைகளுக்காக ரூபா 2,571,736 மொத்த பெறுமதியான படி மற்றும் நிறைவேற்று தரத்திலுள்ள உத்தியோகத்தர்களினால் சேமிக்கப்பட்ட மருத்துவ விடுமுறைக்காக ரூபா 1,545,249 படி செலுத்தப்பட்டது. | 2022/2023 ஆம் ஆண்டுக்குரிய பங்கிலாபம் தற்பொழுது திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். | சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.7 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| கம்பனியால் ஆண்டு முழுவதும் முதிர்ச்சியடைகின்ற நிலையான வைப்புக்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வட்டிப் பணத்தின் மொத்தம் ரூபா 416,610,193 தொகை மீண்டும் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. கம்பனியிடம் ரூபா 3,637,072,070 நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்ட மிகை நிதி காணப்படுகின்ற பின்னணியில் மீளாய்வாண்டின் போது மேலதிகப்பற்று வசதிகளைப் பெற்று அதற்கான வட்டியாக ரூபா 3,232,997 செலுத்தியிருந்தமையின் காரணமாக முறைப்படியாக நிதி முகாமைத்துவம் செய்யப்பட்டிருக்கவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | இந்த விடயத்துடன் இணங்கி கொள்ளவில்லை. எனவே எங்கள் கம்பனியில் நிதி முறைப்படியாக முகாமைத்துவம் செய்யப்பட்டுள்ளது என ஞாபகப்படுத்துவதுடன் வங்கி மேலதிகப் பற்று வசதிகளைப் பயன்படுத்துாது நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டுள்ள நிதி கம்பனியின் தொழிற்படு மூலதன தேவைப்பாட்டிற்காக பயன்படுத்தப்படுமாகவிருந்தால் நிலையான வைப்புக்களிலிருந்து பெற்ற வட்டி வருமானம் இழக்கப்படும் வாய்ப்பு காணப்பட்டது. எனவே எப்போதும் கம்பனியின் நிதி முறையான முகாமைத்துவத்துடன் பயன்படுத்தப்பட்டுள்ளது என குறிப்பிட விரும்புகிறேன். | கம்பனியின் நிதி ஆற்றலினை மேம்படுத்துதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 292,753,580 வரிக்கு பின்னைய இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வரிக்கு பின்னைய இலாபம் ரூபா 361,195,599 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 68,442,019 குறைவு அவதானிக்கப்பட்டது. இக்குறைவிற்கு செயற்பாட்டு நட்டமும் வருமான வரி அதிகரிப்பும் பிரதான காரணமாக இருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2024 மே 31 ஆந் திகதி வரை விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படாது 2023 திசெம்பர் வரை காலாவதியாகியுள்ள ரூபா 3,672,270 பெறுமதியான நெனோ நைட்ரஜன் திரவப் பசளை 500 மி லீற்றரிலான 1809 போத்தல்கள் கம்பனியின் களஞ்சியங்களிலும் ரூபா 1,423,030 பெறுமதின 701 போத்தல் திரவப்பசளைகள் வரையறுத்த லங்கா பசளைக் கம்பனியின் களஞ்சியங்களிலும் காணப்பட்டிருந்தும் அது சம்பந்தமாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இப்பிரச்சினையானது எங்க கம்பனியின் தரப்பிளர்களி செயற்திறனின்மை அல்ல தவறுதலின் காரணமாக ஏற்பட்ட அல்ல என வலியுறுத்துவதுட எங்களால் விவசாய அமைச்சி மூலம் வழங்கப்பட்டுள் பகிர்ந்தளித்தல் திட்டத்திற்கு இணங் அனைத்து பசளைகளு பகிர்ந்தளிக்கப்பட்டதுடன் மிகுதியா உள்ள நெனோ நைட்ரஜன் 5 மி.லீற்றரிலான 1809 போத்தல்கள் எ எழுத்துமூலம் தெரிவிக்கப்பட் அதற்காக எடுக்க வேண்டி | காலாவதியாவதற்கு முன்னர் பசளைகளை பகிர்ந்தளிதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நடவடிக்கைகள் தொடர்பாகஅ அமைச்சு மட்டத்தி விசாரிக்கப்பட்டிருந்தும் அதற்கா உரிய பதில் கிடைக்காமையி காரணமாக இப்பசளைகள் கம்பனியி களஞ்சியத்தில் மிகுதியாக உள்ள என தெரிவிக்க விரும்புகிறேன். | |
| (ஆ) | 2016 ஆம் ஆண்டில் நிவாரணப் பசளைகளை வழங்குதல் நிறுத்தப்பட்டு விவசாயிகளுக்கு பணம் வழங்கும் நடைமுறைக்கு நிவாரண கொள்கை மாற்றப்பட்டதன் காரணமாக 2016 பெப்ரவரி 29 ஆந் திகதியில் உள்ளவாறு கம்பனியிடம் காணப்பட்ட நிவாரணப் பசளைகளுக்காக அரசாங்கத்தின் பங்களிப்பு பணமாகிய ரூபா 2,112,468,040 தொகை திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்படாது பசளை இறக்குமதிக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட குறுங்கால கடன் மீதான வட்டிச் செலவு முத்திரை மற்றும் எழுது கருவி கட்டணமாக ரூபா 780,101,025 தொகை அதற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2024 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அந்த திறைசேரிக்கு செலுத்தப்படாது நிறுத்திவைக்கப்பட்ட பெறுமதி ரூபா 1,332,367,014 ஆக இருந்தது. | இப்பிரச்சினை சம்பந்தமாக பொதுத் திறைசேரியுடன் கலந்துரையாடப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இப்பிரச்சினையை திறைசேரியின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் தீர்த்துவைப்பதற்கு முடியும் என்பது எங்களின் கருத்தாகும். | திறைசேரிக்கு மேற்கொள்ளப்பவேண்டிய பணம் அனுப்புதல்களை முறைப்படியாக திர்த:தவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2021 ஆம் ஆண்டின் போது இறக்குமதி செய்யப்பட்ட KCL பசளைகளுக்காக வெளிநாட்டு வழங்குனர்களுக்குச் செலுத்த வேண்டியிருந்த அமெரிக்க டொலர் 5,707,739.40 தொகையானது வெளிநாட்டு நாணய பற்றாக்குறையின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட திகதிகளில் செலுத்தப்படாததுடன் பின்னர் அப்பணத்தை வழங்குனருக்கு தவணை அடிப்படையில் செலுத்துவதற்கு இணங்கி கொள்ளப்பட்டு அதற்கு தேவையான பணத்தை வாரத்திற்கு ரூபா 250,000 வீதம் கம்பனியின் வங்கி கணக்கிற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் வங்கி கட்டணமும் உள்ளடங்கலாக வழங்குனருக்குச் செலுத்த வேண்டிய அனைத்து பணத்தினையும் செலுத்தி முடிவடைந்ததன் பின்னர் அந்த பெற்ற பாணத்தில் நாணய மாற்று வீத வித்தியாசத்தின் அடிப்படையில் கம்பனியிடம் இன்னும் ரூபா 31,791,644 தொகை மிகுதியாக இருந்தும் அது மீண்டும் திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. | இது சம்பந்தமாக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என தெரிவிக்க விரும்புகிறேன். | திறைசேரிக்கு மேற்கொள்ளப்பட வேண்டிய பணம் அனுப்புதல்களை முறைப்படியாக செய்தல் வேண்டும். |

**3.2 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ஹம்பாந்தோட்டையில் அமைந்துள்ள குத்தகை காணியில் ஒரு களஞ்சியத்தை நிர்மாணிப்பதற்காக 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 3,732,901 தொடக்கச் செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தும் இந்த அறிக்கைத் திகதி வரை எந்த நிர்மாணவேலைகளும் இடம்பெற்றிருக்கவில்லை. | ஹம்பாந்தோட்டையில் அமைந்துள்ள காணியில் களஞ்சிய கட்டிடத் தொகுதியினை நிர்மாணிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்தும் மீண்டும் அரசாங்கத்தின் கொள்கைகளில் இடம்பெற்ற மாற்றத்தின் அடிப்படையில் இந்நடவடிக்கை நிறுத்திவைக்கப்பட்டுள்ளதுடன் இப்பிரச்சினை தொடர்பாக கம்பனியின் பணிப்பாளர் சபைக்கு விளக்கமளித்து மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கு எதிரபார்க்கப்படுவதுடன் அதற்கிணங்க மிகவும் துரதமாக இப்பிரச்சிலையை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்க விரும்புகிறேன். | வளங்கள் வினைத்திறனாக பயன்படுத்தப்படுதல் வேண்டும். |

**3.3 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| இரசாயனப் பசளைகளை இறக்குமதி செய்து பகிர்ந்தளித்தல் கம்பனியின் வழக்கமான செயற்பாடாக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது இலங்கை சுங்கத்தில் ஏலவிற்பனை செய்வதற்கு இருந்த 396.45 மெற்றிக்தொன் யூரியா பசளைகள் ரூபா 56,993,652 தொகைக்கும் ஒரு உள்நாட்டு இறக்குமதியாளரிடமிருந்து 1200 மெற்றிக் தொன் யூரியா பசளை ரூபா 207,600,000 தொகைக்கும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. உள்நாட்டு பெறுகை நடைமுறைகளின் போது கேள்வி மனுக்களில் குறிப்பிட்ட 03 ஆண்டுகள் ஆகக் குறைந்த அனுபவத்தினை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு கேள்விதாரரின் கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்படாமையால் கேள்வி மதிப்பீட்டின் போது முக்கியமான வரையறையினை பொருட்படுத்தாது மதிப்பீட்டுக் குழு நடவடிக்கை எடுத்தமை பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணக்கமற்றது என கணக்காய்வின் பொது அவதானிக்கப்பட்டது. | முன்னைய ஆண்டில் அதாவது 2023/2024 நிதி ஆண்டு தொடர்பாக பெறுகை சட்ட விதிகளுக்கு இணங்க 8,000 மெட்றிக் தொன் அளவான யூரியா பசளையை இறக்குமதி செய்வதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தும் பசளைகளை வழங்குவதற்கு முடியாதிருந்ததன் காரணமாக அந்த வழங்குனரின் கேள்விப் பிணை முறியையும் கம்பனியால் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே மீண்டும் 20,000 மெட்ரிக் தொன் யூரியாவினைப் பெற்றுக்கொள்வதற்காக விருப்பினைக்கோரும் (EOI) நடைமுறைப் பயன்படுத்தியும் பசளைகளை இறக்குமதி செய்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தும் அதற்காக அமைச்சு மட்டத்தில் இடம்பெற வேண்டிய செயற்பாடுகளின் தாமதத்தின் காரணமாக அந்த நடவடிக்கையும் தாமதமடைந்துள்ளது.<br><br>அவ்வாறே அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு இணஙக சிறிய தேயிலை தோட்ட உரிமையாளர்களுக்கு நிவாரண | பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணங்க பெறுகைகளை மேற்கொள்வதற்கும் முறையான அங்கீகாரத்தின் அடிப்படையில் கொள்வனவு செய்வதனை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

விலைக்கு தேயிலைக்கான பசளைகளை வழங்கும் செயற்திட்டத்தினை தொடர்ச்சியாக செயற்படுத்தும் குறிக்கோளில் அதற்குத் தேவையான யூரியா பசளைகளை பெறுகை நடைமுறையினைப் பயன்படுத்தி அப்போது சந்தையில் காணப்பட்ட விலைகளுடன் ஒப்பீட்டுப் பார்க்கையில் மிகவும் பொருத்தமான விலைகளையும் ஆகக்குறைந்த விலைகளையும் சமர்ப்பித்த வழங்குர்களின் யூரியா பசளைகளை கொள்வனவு செய்தல் செய்வதற்காக தேசிய பசளைகளை கொள்வனவு செய்தல இடம்பெற்றுள்ளதுடன் அப்பசளை இருப்பினை செய்வதற்காக தேசிய பசளைகள் செயலகத்தின் மூலம் வழங்கப்படுகின்ற விற்பனை செய்யும் அங்கீகாரம் கிடைத்துள்ளது உரிய சான்றிதழின் பிரதி உள்ளது.

மேலும் இலங்கை சுங்கம் பறிமுதல் செய்துள்ள யூரியா இருப்பு பொருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் மூலம் எங்கள் கம்பனிக்கு 396.45 மெற்றிக் தொன் யூரியா பசளையை பெற்றுக்கொள்வதற்காக அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க அந்த பசளை இருப்பும் திறந்த ஏல விற்பனையின்றி பெற்றுக்கொள்வதற்கு எங்கள் கம்பனிக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது என கண்டிப்பாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.